## 7. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

### (ஈ) தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணைய (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2019 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணைய (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் ஆய்வு செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

## 11. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—*தொடர்ச்சி*

### (அஈ) தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணைய (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2019

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணைய (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/2019),* மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணைய (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/2019)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

---

*@ 20–7–2019 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.*